**உ**







## ஸ்ரீ சிவன் ஸார்

மஹாபெரியவாளுடைய பூர்வாச்ரம தம்பி ஸ்ரீ சிவன் ஸார். அவரை தரிசிக்கிற பாக்கியமும் அவரோட பழகிய போது சில அனுபவங்களும் எனக்கு கிடைச்சுது. இதெல்லாம் அனுபவங்கள் என்று சொல்லக்கூடாது. ஒவ்வொரு தரிசனமும், ஒவ்வொரு வார்த்தை அவர் சொன்னதும் பெரிய அனுக்ரஹம். அதை இப்ப நான் புரிஞ்சுகிறேன். அதெல்லாம் பகிர்ந்துக்கணும்னு சில பேர் கேட்டா. நான் ரொம்பவே தயங்கிண்டே இருந்தேன். ஏன்னா, அவ்ளோ பெரிய மஹான், நம்மகிட்ட பழகி இருக்கார், வாஸ்தவம்தான். ஆனா அந்த லக்ஷணங்கள் ஒண்ணுமே நம்மகிட்ட இல்லையேன்னு நான் ஒவ்வொரு வாட்டியும் நினைப்பேன். இருந்தாலும் அந்த அனுபவங்களோட sweetness, அதை பகிர்ந்துகிறதுல தப்பு இல்லைன்னு நினைச்சு, அதைப்பத்தி பேசறேன்.

நான் ஸ்வாமிகள் கிட்ட (திருவல்லிக்கேணி பெரியவா என்றும் ஆங்கரை பெரியவா என்றும் அழைக்கப்பட்ட ஆங்கரை ஸ்ரீ கல்யாணராம பாகவதர்) பழகிண்டு இருந்தேன். அவர் என்னை தன் குழந்தையா வெச்சு காப்பாத்திண்டு இருந்தார். அவர் மூகபஞ்சசதி, விஷ்ணு சஹஸ்ரநாமம், ஆதிசங்கரரோட ஸ்லோகங்கள், சுந்தரகாண்டம் பாராயணம் என்று ஒவ்வொண்ணா ஆரம்பிச்சு சொல்லி கொடுத்துண்டு இருந்தார். ஸ்வாமிகள் கிட்ட பக்தியா இருந்தவா மஹாபெரியவா கிட்ட போனா, பெரியவா ரொம்ப கருணையா விசாரிச்சு, தனி அனுக்ரஹம் பண்ணியிருக்கா, என்று நிறைய கேள்விப்பட்டு இருந்தேன். ஸ்வாமிகள் அடிக்கடி "மஹாபெரியவாளை தரிசனம் பண்ணு" என்பார். நான் காஞ்சீபுரம் போய் பெரியவாளைப் பார்ப்பேன். ஆனா பெரியவாகிட்ட நெருங்கறதுக்கு ரொம்ப பயம். அந்த மடத்து ஆசாரங்கள், பெரியவாளோட தெய்வத்தின் குரல் படிச்சிருந்தேன். அதெல்லாம் வெச்சுண்டு, என்னமோ ஒரு பயம். ஆனா நமக்கும் அந்த மாதிரி ஸ்வாமிகளோட பக்தன் அப்டீங்கிற அளவுல மஹாபெரியவா அனுக்ரஹம் பண்ணனும், அப்டீங்கிறது பிரார்த்தனை. அது மனசுல இருந்துண்டே இருந்தது.

“குருமூர்த்தே த்வாம் நமாமி காமாக்ஷி” னு பெரியவாளை நமஸ்காரம் பண்ணு, உனக்கு பெரியவா அனுக்ரஹம் பண்ணுவா, என்று ஸ்வாமிகள் தினம் தினம் சொல்லிண்டு இருந்தார். அதனால அந்த ஒரு பிரார்த்தனை. மஹாபெரியவா கிட்ட ஒரு பிரார்த்தனை பண்ணிணா அது நிறைவேறாம போகாது அப்டீங்கிறதுக்கு, மஹாபெரியவா ஒரு குழந்தையாட்டம் அணைச்சு ஒருத்தருக்கு அன்பு பாராட்டினா எப்படி இருக்குமோ, அதே அனுபவத்தை நான் சிவன் ஸார் கிட்ட அடைஞ்சேன்.

சிவன் ஸாரைப் பத்தி ஸ்வாமிகளே தெரிஞ்சுண்டு அவரை தரிசித்த போது, ரொம்ப ஆச்சர்யப்பட்டார். "இப்படி ஒரு பெரிய சித்த புருஷர், பசி தாகத்துக்கு எல்லாம் மேல இருக்கார், மஹாபெரிவாளோட சொந்த தம்பி, மடத்துல இவ்ளோ வருஷம் பழகி இருக்கோம், இப்படி ஒருத்தர் இருக்கார்னே தெரியலியே! இவ்ளோ வருஷம் கழிச்சுதான் எனக்கு தெரிஞ்சதிலிருந்தே இவர் எவ்வளவு பெரிய சித்த புருஷர் அப்டீங்கிறது தெரிகிறது. அவர் நினச்சாதான் அவர் கிட்ட நெருங்கவே முடியும்னு தெரியறது. பெரியவா மௌனம் போட்டு விட்டதால், எனக்கு வழி காட்ட ஸாக்ஷாத் பெரியவாதான், சிவன் ஸார் ரூபத்துல வந்திருக்கார்", என்று ஸ்வாமிகள் உருக்கமாக சொல்லுவார்.

ஸ்வாமிகள் என்னிடம் சிவன் ஸாரை பாக்கும் போது "சதாசிவ ப்ரும்மேந்திர ஸ்வரூபேப்யோ சிவன்ஸார் சத்குருப்யோ நமஹ" என்று சொல்லி நமஸ்காரம் பண்ணு, என்று சொன்னார். நான் ஒரு நாள் போனேன். முதல் தரிசனம். ஸ்வாமிகள் சொல்லித் தந்த படி நமஸ்காரம் பண்ணினேன். "என் பேர் கணபதி சுப்ரமண்யம். திருவல்லிக்கேணில ஆங்கரை கல்யாணராம பாகவதர்னு ஒரு பெரியவா இருக்கா, பாகவத ராமாயணம் படிக்கிறவா. அவர் கிட்ட நான் ஸ்தோத்திரங்கள் எல்லாம் படிச்சுக்கிறேன்" என்று சொன்ன உடனே சிவன் ஸார், "அடியார்க்கு அடியனா நீ?" என்று கேட்டார். எனக்கு சட்டுன்னு புரியவேயில்ல. "என்ன பெரியவா?" என்று கேட்டேன். "நீ அடியார்க்கு அடியன்" என்று திரும்ப சொன்னவுடன் எனக்கு அப்படி ஒரு சந்தோஷம். நான் எதை மஹாபெரியவாகிட்ட பிரார்த்தனை பண்ணிண்டு இருந்தேனோ அது எனக்கு கிடைச்சுடுத்து. அப்பவே நமஸ்காரம் பண்ணி சிவன் சாருக்கு அடிமை ஆகி விட்டேன்.

அப்படி அவரை பார்த்த நாள் முதல் என்னை ஆட்கொண்டு ரொம்ப அன்பு பாராட்டினார். அவர் என்னை மாதிரி குழந்தைகள் எல்லாம் வந்தா கொடுக்கறதுக்கு, யாரையாவது "பாதாம் அல்வா பண்ணிண்டு வா" அப்டீம்பார். அந்த மாதிரி பக்ஷணங்கள் எல்லாம் பண்ணச் சொல்லி, அத வெச்சுண்டு இருப்பார். நாங்க எல்லாம் அங்க வருவோம். மணிகணக்காக அங்க உட்கார்ந்துண்டு இருப்போம். ஏதாவது சின்ன சின்ன வேலைகள் குடுப்பார். அவர் கை கால்களில் தேங்காய் எண்ணெய் தடவி விடச் சொல்லுவார். கிளம்பும் போது எங்களுக்கு அந்த பாதாம் அல்வாவை பிரசாதம் மாதிரி கொடுப்பார்.

"நீ போய் பஜ்ஜி வாங்கிண்டு வா" அப்டீம்பார். தான் கொஞ்சம் சாப்பிட்டுவிட்டு எனக்கு மீதியை தந்து விடுவார். "இது தனி taste இல்ல" என்று சொல்வார். "நீ இளநீ வாங்கிண்டு வருவியே" என்று சொல்வார். சரீன்னு போய் இளநீர் வாங்கிண்டு வருவேன். இப்படி அன்பு பாராட்டி, ஒரு வாரம் பத்து நாள்ல ரொம்ப நெருக்கம் ஆயிட்டார். அப்புறம் ஒரு மாதிரி regular ஆக போனேன்.

ஒரு நாள் அவருடைய ஜாதகத்தையும், கௌசிக நாடின்னு அவரைப் பத்தி ஒரு நாடி இருந்தது. “அதை எழுதிக்கோ” அப்டீனார். அதுல எவ்ளோ ஒசத்தியா அவர பத்தி போட்டிருக்கு!

இது விஸ்வாமித்ர மகரிஷியோட வார்த்தைகள் -

“தாயான திரிபுர சுந்தரியே உந்தன்

தக்க அருள் இவன் அகம் புகுந்து தாயே

தக்க அத்வைதம் அதின் சாரமெல்லாம்

சத்குரு பேரருளால் தானே வந்து வலுவாய் கூடி

நான் இதை நடுவில் இருந்து படிக்கறேன், முன்னாடி உலக குருவான, மடாதிபதியான, இவருடைய அண்ணா மஹாபெரியவா, இவருடைய சத்குருன்னு mention பண்ணிட்டார்.

"அத்வைதம் அதின் சாரமெல்லாம்

சத்குரு பேரருளால் தானே வந்து வலுவாய் கூடி

பூரணத்தை மருவு சுக விழியினால் தரிசித்து ஏற்றி

எந்த வித செயல்கள் இவன் செய்த போதும்

எப்போதும் மாநத நிஷ்டை கூடி

சுந்தர ஜோதியின் அடியில் நிற்பன்"

என்று எவ்ளோ அழகான வார்த்தைகள்! இதுல,

"அம்பிகையே நேரில் கௌசிகருக்கு அறிவித்ததாவது"

அதாவது கௌசிகர் சொல்லி முடிச்ச உடனே அம்பாளே பதில் சொல்றா -

"இம்மைந்தன் உயர் பிறவி ஓங்கொடுக்கும்

இயல்பான தாய் தந்தை ஓங்கொடுக்கும்

பன்னிவன் கனிஷ்டன் கடை பெருத்த முக்தன்

பாரெங்கும் எம்மதத்திற்கும் ஆசான்

என்அருள் மிக வாய்ந்தோன்

நவசித்தர்க்கும் எழிலான மேம்புடைய ஞானி"

என்று அம்பாள் மஹாபெரியவாளை பத்தி “நவசித்தர்க்கும் எழிலான மேம்புடைய ஞானி” னு சொல்றா. ஸார் இதை எழுதிக்க சொன்னார். அவருடைய ஜாதகத்தில் அகண்ட சாம்ராஜ்ய யோகம் இருப்பதை காண்பித்தார்.

அப்புறம் ஸார், தன் கிட்ட வந்தவாளை எல்லாம், விலை கொடுத்து, ஏணிப்படிகளில் மாந்தர்கள் புஸ்தகத்தை வாங்கி அதை படிக்கச் சொல்வார். அப்போ அந்த புஸ்தகத்துடைய விலை நூற்றி இருபது ரூபாயோ என்னவோ. அதை வாங்கிண்டேன். என் புஸ்தகத்தில்

“With best blessings to Chiranjeevi Ganapathy Subrahmanyam - Sadasivam”

என்று எழுதி கொடுத்து இருக்கிறார். ஒரு வாட்டி ஸார் என் friend சந்திரசேகரிடம் “க்ஷேமமாக இரு” என்று சொல்லி விட்டு “க்ஷேமமாக இரு” என்றால் என்ன அர்த்தம் தெரியுமா? என்று கேட்டார். அவன் "பெரியவா சொல்ல வேண்டும்" என்று கேட்ட போது “கார் பங்களா எல்லாம் இல்லை. health and happiness” என்று சொன்னார். Best blessings என்பதற்கு அதே பொருளை நான் வெச்சுண்டு இருக்கேன்.

ஏணிப்படிகளில் மாந்தர்கள் புஸ்தகத்தில் அவர் கிட்டேயே நிறைய portions படிச்சேன். முதல்ல படிக்கிறவாளுக்கு ஸோலனும் க்ரீஸசும் என்கிற ஒரு topic படிக்கச் சொல்வார். ஏணிப்படிகளில் மாந்தர்கள் புஸ்தகத்தை மூணு ஆவர்த்தி படிக்கச் சொன்னார். அதை படிச்சு முடிச்சேன். அதுக்கப்பறம் திரும்பவும் படிக்கட்டுமான்னு கேட்டேன். "நீ இதத்தான் படிச்சு முடிச்சுட்டியே. நீ ராமகிருஷ்ண பரமஹம்சரோட புஸ்தகங்கள் வாங்கிப் படி," என்று சொன்னார். நான் அப்போ வேலையை விட்டுட்டு இருந்தேன். எனக்கு தினம் பத்து ரூபா அப்பா கொடுத்துண்டு இருந்தா. அந்த புஸ்தகம் வாங்கறதுக்கு வசதி இல்ல. ராமகிருஷ்ண பரமஹம்சரோட புஸ்தகங்கள் அவ்வளவு மலிவு விலையில குடுக்கறா. அதை வாங்க முடியல. ஸ்வாமிகள் எனக்குப் பணம் கொடுத்தார். “சிவன் ஸார் சொல்லியிருகார்னா நீ உடனே வாங்கிப் படி. இன்னிக்கே வாங்கிப் படி” என்று சொல்லி என்னை படிக்க வெச்சார்.

அந்த ராமகிருஷ்ண பரமஹம்சரோட அமுதமொழிகள் மூணு பாகங்கள். அதுல மகேந்திரநாத் குப்தாங்கிறவர் ராமகிருஷ்ணரோட வாழ்கையில நடந்த சில நிகழ்ச்சிகளை பதிவு பண்ணியிருக்கார். அதை படிச்ச போது அந்த காட்சிகள் எல்லாம், ஸ்வாமிகள் கிட்ட நடக்கிற மாதிரியே தோணித்து. ஸ்வாமிகளுடைய அந்த தெய்வீகப் பித்து, பணத்துல பற்றின்மை, ஞானம் இதெல்லாம் புரிஞ்சுகிறதுக்காகத் தான் என்னை சிவன் ஸார் ராமகிருஷ்ண பரமஹம்சரை பத்திப் படின்னு சொன்னார் என்று நினைக்கிறேன்.

ஸ்வாமிகளோட பூர்வாஸ்ரமத்துல அப்பா வெச்ச பேர் "ராமகிருஷ்ண சர்மா". கூப்பிட்ட பேர் கல்யாணராமன். ஸ்வாமிகள் ஜாதகம் எண்பது பெர்சென்ட் ராமகிருஷ்ண பரமஹம்சர் ஜாதகம் போலவே இருக்கும். வாழ்க்கையும் அப்படி தான். தமிழ்நாட்டில் இவர் அவதரித்ததால் ஆசாரங்கள் மட்டும் கொஞ்சம் வேற மாதிரி. உலகத்தில் ஒட்டியும் ஒட்டாமல் வாழ்ந்த மஹான்.

இந்த போஸ்ட் கார்ட் incident முன்னாடியே நான் எழுதியிருக்கேன். சிவன் ஸாரோட ஏணிப்படிகளில் மாந்தர்கள் படிச்சா, அதுல நூத்தி எண்பது para இருக்கும். பாபி, பாமரன், விவேகி, சாது, அதுக்கு மேல உயர் விவேகிகள் அப்படி எல்லாம். இதுல ஸ்வாமிகள் ஒரு தெய்வசாதுவாக, மகானாக இருக்கார், சிவன் ஸார் துறவியா இருக்கார், மஹாபெரியவா ஞானி அப்டீங்கிறது புரிஞ்சது. ஆனா நம்மால இந்த பாபி, பாமரன் தாண்டவே முடியலயே! எது right, wrong தெரிஞ்சுகிறது, அதுல ஒரு சொட்டாவது முயற்சி பண்றது, விவேகம். தன்னலமே இல்லாம இருக்கறது சாது குணங்கள். இதெல்லாம் முடியவே முடியாதுங்கிறது போல இருக்கே காலம். இந்த இருபது வயசுக்குள்ள படிச்ச புஸ்தகங்களும், பார்த்த சினிமாவுமே, புத்தியை கெடுத்துடுத்து. இதுல எங்கே இருந்து மீள்றது, என்று ரொம்ப பயம் வந்தது.

ஸார்க்கு ஒரு கார்ட்ல எழுதி போட்டேன். "மஹாபெரியவாளை பாத்துருக்கேன், உங்களை தரிசனம் பண்ணியிருக்கேன். ஸ்வாமிகளை ஆச்ரயிச்சிருக்கேன், ஆனாலும் இந்த படிகள்ல மேலே போகறதுக்கு வழியே தெரியாம இருக்கே. நீங்கதான் எனக்கு தயவு பண்ணணும்" என்று எழுதி இருந்தேன். நான் போஸ்ட் கார்ட்ல எழுதி ஸார் இருந்த வ்யாசராவ் தெருவுக்கு போஸ்ட் பண்ணிட்டேன்.

அப்புறம் நாலு நாள் கழிச்சு அங்க போனேன். நான் போன அன்னிக்குதான் அந்த கார்டு வந்தது. போஸ்ட்மன் கொண்டு வந்து கொடுத்தார். திருவாரூர் கணபதி சுப்ரமணிம்னு ஒருத்தர் அங்க அன்னிக்கு இருந்தார். அவர் அதை வாங்கி உள்ள கொண்டு வந்தார். "இவன் லெட்டர் போட்டுருக்கான்", என்று சொன்னார். ஸார் உடனே படீன்னு சொன்னார். அவர் அதை படிச்சார். அப்போ சிவன் ஸார் என்னைப் பாத்து "நமஸ்காரம் பண்ணு" அப்டீனார். நான் எழுந்து அவருக்கு நமஸ்காரம் பண்ணினேன். "நீ ஏன் பயப்படற. நீ தான் திருவல்லிக்கேணி பெரியவா காலைப் பிடிச்சுண்டு இருக்கியே. அவரை தியானம் பண்ணு, மேல போலாம்" என்று சொன்னார். ஸாருக்குப் பெரிய கைகள். பெரிய கால்கள். அந்த பெரிய கையினால எனக்குப் பெரிய அபயம் கொடுத்தார். அந்த வார்த்தைகள் அவ்வளவு ஆறுதலா இருந்தது. அப்புறம் அந்த லெட்டர் ஐயும் எங்கிட்ட கொடுத்தார். நான் அதை வெச்சிண்டு இருக்கேன்.

அப்புறம் சாயங்காலம் வந்து ஸ்வாமிகள் கிட்ட இந்த மாதிரி நடந்துது என்று சொன்னேன். ஸ்வாமிகள் "நீ தியானம் பண்ணுன்னா ஏதாவது meditation class

போயிடாதே. நான் சொல்லிக் கொடுத்த ஸ்தோத்திரங்களை எல்லாம் பாராயணம் பண்ணு, இதுதான் தியானம்” என்று சொனார். அந்த வார்த்தைகளும் அவ்வளவு powerful. ஏன்னா நாம கார்யமா ஒண்ணு பண்ணினா தான் நம்மால தியானம் எல்லாம் பண்ண முடியும். உட்கார்ந்து மூக பஞ்சசதி படி, ராமாயணம் படி என்று சொன்னாதால், அந்த ராமாயணத்தப் படிக்கும் போது ஸ்வாமிகள் ஞாபகம் வரது. அதுதான் தியானம். அப்படியில்லாம நாம வேற எப்படி மகான்களை தியானம் பண்ண முடியும்? அவருடைய பேச்சை கேட்டு இந்த ஸ்தோத்திரங்கள் படிக்கிறதனால, அட்லீஸ்ட் ஒரு நாளைக்கு எல்லா ஓட்டத்துக்கு நடுவுலயும் கொஞ்ச நேரம் இவாளை எல்லாம் நினைக்க முடியறது.

அந்த காலகட்டத்துல ஸ்வாமிகள் சிவன் ஸார் கிட்ட உத்தரவு வாங்கிண்டு சன்யாசம் வாங்கிண்டார். சிவன் ஸார் “சன்யாஸத்துக்குத் தடை விதித்து விடுவதே நலம், எல்லாரும் இந்த காலத்துல அந்த ஆஸ்ரமத்துக்கு களங்கம் கற்பிக்கிறா” என்று எழுதியிருக்கார். அதனால ஸ்வாமிகள் ஒருத்தர் மூலமாக சிவன் ஸார்கிட்ட சன்யாசம் வாங்கிக்கிறதுக்கு permission கேட்டார். “அவருக்கு என்னத்துக்கு? அவர் உத்தம ஜீவன். அவர் வேஷ்டி கட்டிண்டு இருந்தாலே சன்யாசி தான்” என்று ஸார் சொன்னார். அப்ப ஸ்வாமிகள் விட்டுட்டார். அப்புறம் திரும்பவும் ஒரு வாட்டி கேட்கச் சொன்னார். ஸார் “ஆஹா அவசியம் வாங்கிக்கச் சொல்லுங்கோ. அமோகமா இருப்பார். அந்த ஆத்து மாடியிலேயே இருக்க சொல்லுங்கோ” என்று சொல்லிட்டார். அப்பறம் ஸ்வாமிகள் சன்யாசம் வாங்கிண்டார். முண்டனம் பண்ணிண்டு, ப்ரைஷ மந்த்ரதைச் சொல்லி, மஹாபெரியவா பாதுகையில இருந்து காவியை எடுத்துக் கட்டிண்டு, சன்யாசம் வாங்கிண்டார். எனக்கு அன்னிக்கு ஸ்வாமிகள் சன்யாசம் எடுத்துக்கற அந்த காட்சியை பாக்கற பாக்கியம் கிடைச்சுது.

அதுக்கப்பறம் சிவன் ஸார் பல பேர் கிட்ட பல தடவை

“இவர் தான் geniune சந்நியாசி."

"இந்த மாதிரி பாகவதத்துக்காக, ராமாயணத்துக்காக தன்னுடைய உடல், பொருள் ஆவியெல்லாம் அர்ப்பணிச்சவாளை பாக்கறதே புண்யம் என்று நான் எல்லார்கிட்டயும் சொல்லிண்டு இருக்கேன்."

"அவா உடம்பு நன்னா இருக்கணும். அபூர்வமான ஆத்மா."

"சாந்தத்தோட இருக்கார். provoke பண்ணாலும் கோபப் படாம இருக்கறதுக்குப் பேர் தான் சாந்தம். அப்படி பரம சாந்தத்தோட இருக்கார்."

"இவாளை ஆச்ரயிச்சிருக்கிறது உனக்கு ரெண்டாயிரம் ரூபா வேலைக்கு மேல," (அப்போ நான் வேலை தேடிண்டு இருந்தேன். அதனால இவாளை ஆச்ரயிச்சிருக்கிறது அவ்ளோ பாக்கியம் என்ற அர்த்தத்தில்) சொன்னார்.

அப்படி "geniune சந்நியாசி, சன்யாசத்துக்கு இவர்தான் பாத்திரம். இந்த அனுஷ்டானத்தோட பாகவதம் படிச்சுண்டு இருந்தாலே போறும், வேற தண்ட கமண்டலங்கள் வேண்டாம். அவரை சாதாரணமா சன்யாசின்னு சொல்லக் கூடாது. யதீந்திராள் என்று சொல்லணும்" இப்படி கோவிந்த தாமோதர ஸ்வாமிகளைப் பத்தி ஸார் நிறைய சொல்லிண்டே இருந்தார்.

என் கிட்டே நிறைய தடவை சொன்னார். ஜானகிராம மாமா, நாகராஜ மாமா, நாராயண ஐயர், எல்லார் கிட்டயும் ஸ்வாமிகளைப் பத்தி ரொம்ப சொன்னார். மோகன், சிவராமன் கௌரி, அப்படி பல பேரை ஸ்வாமிகள் கிட்ட போய் நல்ல விஷயங்கள் கத்துகோங்கோன்னு அனுப்பி வெச்சார்.

அப்படி அவருடைய ஏணிப்படிகளில் மாந்தர்கள் புஸ்தகத்து மூலமாகவும், ஸ்வாமிகளோட தூய்மை, அவரோட உயர்ந்த நிலை, என்னனு புரிஞ்சுது. மேலும் ஸ்வாமிகள் பெருமையை சிவன் ஸார் சொல்லிண்டே இருந்தார். நானும் அப்பதான் ஸ்வாமிகள் கிட்ட பழகிண்டு இருந்தேன். எனக்கெல்லாம் அதை கேட்டதுனால தான் ஸ்வாமிகள் கிட்ட பக்தி வந்தது. ஸ்வாமிகள் ரொம்ப எளிமையா இருப்பார். அவர் தனியா பாராயணம் பண்ணிண்டு இருப்பார். வந்தவாளுக்கு ஆறுதல் சொல்லி, அவா கஷ்டம் தீரும். இத்தனை தூரம் அவரோட மஹிமையை புரிஞ்சுண்டு, அவர் கிட்ட பக்தியோட இருக்கணும்கிறது எனக்கு சிவன் ஸார் சொல்லிச் சொல்லிதான் வந்தது.

ஒரு வாட்டி நான் ஸ்வாமிகளோட உட்கார்ந்துண்டு இருக்கேன். ஸ்வாமிகள் மூக பஞ்சசதி படிச்சுண்டு இருக்கார்.

"காமாக்ஷி தாவாக கடாக்ஷ யதீஷ்வரொஸெள" என்று படிச்சார். காமாக்ஷியோட கடாக்ஷம் ஒரு யதீஷ்வரர் போல விளங்குகிறது, என்று அர்த்தம். அப்போது ஸ்ரீ நாராயண ஐயர் உள்ள வந்தார். "நான் சிவன் ஸாரை தரிசித்து நமஸ்காரம் பண்ணிட்டு வந்தேன்"னு சொன்னார். "உங்களை சாதாரண சன்யாசின்னு சொல்லக்கூடாது, யதீந்திராள் னு சொல்லணும்னு சொன்னார்" அப்டீனார். படிச்ச அந்த ஸ்லோகத்தோட வரிக்கும், நாராயண ஐயர் சொல்றதுக்கும் அவ்வளவு பொருத்தமா இருந்தது.

ஸ்வாமிகளும் சிவன் ஸார் கிட்ட தெய்வ பக்தியா இருந்தார். அங்கே வந்தார்னா குழந்தை மாதிரி இருப்பார். பாகவதத்துல இருந்து, சாதுக்களை, யோகிகளை, போற்றி வரக்கூடிய ஸ்லோகங்களை எழுதிண்டு வருவார். அந்த ஸ்லோகங்களைச் சொல்லி நமஸ்காரம் பண்ணுவார். சில சமயம் என்னை

படிக்கச் சொல்வார். ஸ்வாமிகள் மஹாபெரியவா கிட்ட எப்படி இருந்தாரோ அதே மாதிரி சிவன் ஸார் கிட்ட, பக்தியோடு குழந்தை போல, தனக்கு எதுவும் தெரியாது, அனுக்ரஹம் வேணும் என்று இருப்பார். இப்படி இரண்டு மஹா புருஷர்களை சேர்ந்து தரிசத்தது எனக்கு ஒரு பெரும் பாக்கியம். ஒரு வாட்டி ஸார் ஸ்வாமிகள் கிட்ட "ஏணிப்படிகளில் மாந்தர்கள் புஸ்தகத்தை படிச்சுட்டு நான் ஒரு மேதாவின்னு சொல்றா. பகவான் dictate பண்ணினார். நான் எழுதினேன். அவ்வளவு தான்!" என்று சொன்னார்.

ஸ்வாமிகள் ஆசார சீலர். ஆனால் சிவன் ஸார் சாப்பிட்டு விட்டு குடுப்பதை "உச்சிஷ்ட பிரசாதம்" என்று பக்தியோடு வாங்கி சாப்பிடுவார்.

ஸ்வாமிகள் உடம்பு ரொம்ப தளர்ந்து போன போது பாராயணம் மட்டும் பண்ணிண்டு இருந்தார். ஆனால் சிவன் ஸார் ஆசைபட்டார்னு சொல்லி, பதினைஞ்சு நாள்ல ரெண்டு ரெண்டு மணிநேரமா ஸ்ரீமத் பாகவதத்தை உபன்யாசம் பண்ணி இருக்கார். அந்த tape கூட இப்ப கிடைக்கறது. அது ஒரு பெரிய லாபம்.

ஸ்வாமிகள் ஒரு நாளைக்கு லலிதா ஸஹஸ்ரநாமம் பாராயணம் பண்ணிண்டு இருந்தார். அதுல "சதாசிவா அனுக்ரஹதா பஞ்சக்ருத்ய பராயணா" என்று வந்தவுடனே, “ஆஹா” என்று சொல்லி, ”சிவன் ஸாரோட பூர்வாச்ரம பேர் சதாசிவம். அந்த சதாசிவ அனுக்ரஹத்துக்காக தான் நான் காத்துண்டு இருக்கேன்.” என்று சொன்னார். அவ்வளவு உத்தம பக்தி வெச்சுண்டு இருந்தார்.

ஒரு வாட்டி சிவன் ஸார் “இந்த ஏணிப்படிகளில் மாந்தர்கள் புஸ்தகத்துல ஒரு புஷ்பத்தை போட்டுண்டு வந்தாலே மேல போகலாம்” என்று என்கிட்டே சொன்னார். நான் அதை ஸ்வாமிகள் கிட்ட சொன்ன அன்னியிலேருந்து, அவருடைய கடைசி நாள் வரைக்கும், தன் பூஜையில் அந்த புஸ்தகத்தை வெச்சு, அதுக்கு சந்தன குங்குமம் இட்டு புஷ்பம் போடுவார். அந்த புஸ்தகம் இன்னிக்கும் ஸ்வாமிகள் அதிஷ்டானத்தில் பூஜையில் இருக்கிறது.

ஏணிப்படிகளில் மாந்தர்கள் புஸ்தகம், நர்மதா பதிப்பகத்தில் கிடைக்கிறது. தெய்வீகத்தை பற்றியும் ஆத்மீகத்தை பற்றியும் புரிந்து கொள்ள அவசியம் படிக்க வேண்டிய நூல். அதில் உள்ளது போல மஹான்கள் சரித்திரம் அவ்வளவு இனிமையாக, தெளிவாக எங்குமே பார்க்க முடியாது. வேத, தர்மசாஸ்த்ர, இதிகாச புராணங்களுக்கு நிகரான பொக்கிஷம்.

ஒரு வாட்டி நான் சிவன் ஸார் கிட்ட "உங்களுடைய ஏணிப்படிகளில் மாந்தர்கள் ஸ்ரீமத் பகவத்கீதையின் ஸாரம் ஸார். சிறந்த விவேகி, முற்றின விவேகி நிலைகள் வரைக்கும் கர்ம யோகமும், தெய்வ ஸாது, மஹான் வரைக்கும் பக்தி யோகமும், துறவி, ஞானி நிலைகள் ஞான யோகத்தையும் சொல்றாப் போல

இருக்கு" னு சொன்னேன். ஸார் புன்னகையோடு "வாஸ்தவம்! ஆனால் நான் உங்களுக்கெல்லாம் புரியற மாதிரி சொல்லி இருக்கேன்!" என்று சொன்னார்.

ஸ்வாமிகளை கோவிந்த தாமோதர ஸ்வாமிகள்னு கூப்பிடறதுக்கும் சிவன் ஸார் தான் காரணமா இருந்தார். ஒரு நாள் என்கிட்டே "அவாளை பெரியவான்னு சொல்லலாம். நான் exaggerate பண்றேன்னு நினைப்பா. ஸ்வாமிகள்னு சொல்லலாம்" என்று சொன்னார். நான் அதை வந்து ஸ்வாமிகள் கிட்ட சொன்னேன். கோவிந்த தாமோதர ஸ்தோத்திரத்துல ஸ்வாமிகளுக்கு ரொம்ப ப்ரியம். கோவிந்த நாமத்துலயும் ரொம்ப ப்ரீதி. அதுனால கோவிந்த தாமோதர ஸ்வாமிகள் னு கூப்பிடுங்கோன்னு சொன்னார்.

ஒரு வாட்டி நானும் என் தம்பியும கிளம்பி ஹரித்வார், ரிஷிகேஷ் போயிட்டு வந்தோம். ஒரு canல கங்கா ஜலம் கொண்டு வந்தோம். அந்த கங்கா ஜலத்தை எங்கப்பா ஸ்வாமிகளுக்கு கொடுன்னு சொன்னார். நான் அதை ஸ்வாமிகளுக்கு கொடுத்தேன். அவர் அதை கொஞ்சம் எடுத்து ப்ராசனம் பண்ணிட்டு "இத சிவன் ஸார் கிட்ட கொடு. அவர் தான் பரமேஸ்வர ஸ்வரூபம்" என்று சொன்னார்.

சிவன் ஸார் கிட்ட கொடுத்த உடனே அவர் "ஸ்வாமிகளுக்கு கொடுத்தியா?" என்று கேட்டார். நான் "கொடுத்துட்டேன்" அப்டீனேன். சிவன் ஸார் "இந்த canஐ உடனே திருப்பித் தரணுமா?" என்று கேட்டார். "நீங்களே வெச்சுகோங்கோ ஸார்" என்று சொன்னேன். சிவன் ஸார் ஆறு மாசம், ஒரு வருஷத்துக்கு ஒரு தடவை தான் குளிப்பார். அப்படி அவர் ஸ்நானம் பண்ணும் போது இத உபயோகப்படுத்திக் கொள்ளலாம் என்பதற்காக "இந்த can இங்க இருக்கலாமா?" ன்னு கேட்டார். "தாராளமா. உங்களுக்காக தான் ஸார்" என்று சொன்னேன்.

ராமநாராயணன், ஜானகிராம மாமாவோட பிள்ளை. அவன் சிவன் ஸார் மேல ரொம்ப பக்தியா இருந்தான். ஸ்வாமிகள் ரொம்ப encourage பண்ணி "நீ போய் அவருக்கு கைங்கர்யம் பண்ணு"ன்னு சொல்லி, சொல்லி அதை கெட்டியா பிடிச்சுண்டான். நிறைய கைங்கர்யம் பண்ணியிருக்கான். ஒரு நாள் அவா ஆத்துல ஒரு ராம பட்டாபிஷேகப் படம் கீழ விழுந்து frame உடைஞ்சுடுத்து. அது கொஞ்சம் மனசுக்கு கஷ்டமா இருந்தது என்று அவன் வந்து ஸார் கிட்ட கேட்டிருக்கான். "இந்த மாதிரி ஆத்துல படம் விழுந்து உடைஞ்சுது. ஏதாவது பரிகாரம் பண்ணணுமா? என்று கேட்டவுடன், சிவன் ஸார் "நீ ஸ்வாமிகள் கிட்ட கேட்டு அவர் என்ன பண்ணனும்னு சொல்றாரோ அதை பண்ணு" அப்டீனார். ஸ்வாமிகள் "விபீஷண சரணாகதி மூணு ஸர்கம். அதை பாராயணம் பண்ணலாம்" என்று சொன்னார். அதை அவா அப்பா பண்ணினார். அந்த மாதிரி சிவன் ஸாருக்கு, ஸ்வாமிகள் சொல்றது எல்லாம் ஈஸ்வர வாக்கு.

கே.வி.நாராயணஸ்வாமினு பாட்டுப் பாடறவர் ஒருத்தர் இருந்தார். அவர் சிவன் ஸாரை நமஸ்காரம் பண்ண வந்தார். சிவன் ஸார் அவர்கிட்ட "திருவல்லிக்கேணில ஒரு பெரியவா இருக்கா, அவரை போய் நீ நமஸ்காரம் பண்ணுன்னு" சொல்லி, "அவர்கிட்ட தக்ஷிணாமூர்த்தி சம்பந்தமா ஏதாவது ஒரு மந்திரத்தை க்ரஹிச்சுக்கோ" என்று சொன்னார். அவர் அதே மாதிரி வந்து கேட்டுண்டார். அப்பறம் அவர் அடிக்கடி ஸ்வாமிகள் கிட்டே வந்து பாடுவார்.

"திருவல்லிக்கேணி ஸ்வாமிகள் கிட்டயிருந்து வந்திருக்கேன்", என்று ஸ்வாமிகள் பேரைச் சொன்னாலே கைகள் ரெண்டையும் தூக்கி தலை மேல வெச்சுண்டு சிவன் ஸார் நமஸ்கரிப்பார். இப்படி கொண்டாடறேளே னு அதை பார்க்க ஆச்சர்யமா இருக்கும்.

ஒரு நாள் "ஸ்வாமிகளுக்கு இன்னிக்கு அறுபத்து மூணாவது ஜென்ம நக்ஷத்ரம். அவா ரொம்ப நாள் இருக்கணும்" என்று சொன்னேன். "இருப்பா. அவர் நன்னா இருக்கணும், நானும் வேண்டிக்கறேன்" என்று சொன்னார்.

ஒரு வாட்டி சிவன் ஸார் திருவாரூர் போயிட்டு வந்தார். ஒரு பத்து பதினைஞ்சு நாள் இருக்கும். திரும்பி வந்தபோது நான் உள்ள போனேன். அவர் "இப்பதான் உன்னை நினைச்சுண்டேன். நீ வந்துட்டு வந்துட்டு பூட்டின கதவ பாத்துட்டு போயிருப்பியே என்று உன்னை நினைச்சுண்டே இருந்தேன்" அப்டீனார். இப்படியெல்லாம், மகான்கள் இன்னிக்கும் நினைச்சு உருகும் அளவுக்கு அன்பு பாராட்டியிருக்கா.

ஆனா அந்த கால கட்டதுத்துல எனக்கு வேலைக்குப் போகப் பிடிக்கல. நான் ஸ்வாமிகள்கிட்ட "என்னால வேலை பாக்க முடியாது, நான் நீங்க சொல்ற பாராயணங்கள் பண்றேன், உங்களோடவே இருக்கேன்" என்று சொல்லி வேலையை விட்டுட்டேன். அப்போது அவர் "நீ ஏன் இப்படி பண்ற? அப்பா அம்மா படிக்க வெச்சிருக்கா, தங்கை கல்யாணம் இருக்கு, நீ வேலைக்குப் போகணும், உன்னோட ஜாதகத்துலயும் உனக்கு உலக வாழ்க்கைதான் இருக்கு, இந்த மாதிரி life இல்லை" என்று ஸ்வாமிகள் என்னை direct பண்ணிண்டு இருந்தார். அந்த நேரத்தில் சிவன் ஸார் தன்னுடைய ஒரு photo எனக்கு குடுத்தார். அதில் ஸார் ஒரு மாலை போட்டுக் கொண்டு இருப்பார். ஸ்வாமிகள் "பார்! உனக்கு குடுத்த photo வில் ஸார் மாலை போட்டுக் கொண்டு இருக்கிறார். உனக்கு க்ருஹஸ்த ஆஸ்ரமம் தான் நல்லது, என்பதற்காகத் தான்" என்று சொன்னார். சிரித்து விட்டேன்.

வேலை போயிடுத்து, உடம்பு ரொம்ப படுத்தித்து. விரை எல்லாம் வீங்கிண்டு hydrocilனு சொல்லி, கார்த்தால எல்லாம் வலி, சாயங்காலம் ஆச்சுனா தலைவலி. இது ஒரு ஆறு மாசம் இருந்தது. ஸ்வாமிகள் சொல்லி ஹோமியோபதி மருந்து சாப்ட்டுண்டு இருந்தேன். இத அனுபவிச்சுதான்

தீர்க்கணும்கிற மாதிரி இருந்தது. ஒரு வாட்டி ஸ்வாமிகள் சிவன் ஸார்கிட்ட, “இந்த குழந்தைக்கு ரொம்ப உடம்பு படுத்தறது” என்று சொன்ன உடனே, ஸார் “சரியாப் போயிடும்” அப்டீனார். அப்புறம் கொஞ்ச நாள்ல உடனே சரியாய் போயிடுத்து. இப்படி மகான்கள் அனுக்ரஹம் ஆபத்திலிருந்து காப்பற்றும்.

ஸ்வாமிகள் என்கிட்டே “நீ மூகபஞ்சசதி ஸ்தோத்ரம் பாராயணம் பண்ணு. அம்பாள் உபாசனை எல்லாம் வேண்டாம்” னு சொன்னார். ஸ்வாமிகள் அம்பாள் உபாசகர். ஷோடசாக்ஷரி மந்த்ர உபதேசம், கணக்கற்ற ஜபங்கள், பூஜைகள், பூர்ணாபிஷேகம் வரைக்கும் எல்லாம் அவருக்கு கிடைச்சுது. சில பேருக்கு பூஜை எடுத்தும் வெச்சிருக்கார். அது ரொம்ப நாள் முன்னாடி. ஸ்வாமிகள் பிறருக்கு மந்த்ரோபதேசங்கள் எல்லாம் ஒரு காலக்கட்டத்துல பண்ணிண்டு இருந்தார். தன் கிட்ட மந்த்ரோபதேசம் வாங்கிண்டு வெளிநாடு போறது, தன்னிஷ்டப்படி இருக்கறது என்று பார்த்த பின் மந்த்ரோபதேசம் பண்றதை அவர் நிறுத்திண்டுட்டார். கலியில் நாம ஜபம் தான். ராம நாம ஜபம் காப்பாத்தும், என்று எல்லார்க்கும் நாம ஜபத்தை சொல்லிண்டு இருந்தார்.

எனக்கு வந்து, எப்பவுமே விலக்ஷணமா இருந்தா தான் அதுக்கு விசேஷம். அப்டீங்கிரமாதிரி, uniqueஆ இருக்கணும் மந்த்ரோபதேசம் வேணும் என்று ஸ்வாமிகள் கிட்ட கேட்டேன். அவர் “வேண்டாம்ப்பா! காலம் சரியில்ல, நமக்கு அதை தாங்கறதுக்கு யோக்யதை இல்லை. நானே மூகபஞ்சசதி தான் படிச்சுண்டு இருக்கேன்” என்று சொன்னார். ஆனால் சத்தியமா அவர் காலம்பர ஒரு தடவை லலிதா சஹஸ்ரநாமம் பாராயணம் பண்ணுவார். சாயங்காலம் முழுக்க மூக பஞ்சசதி பாராயணம் பண்ணுவார். தான் ஒரு விசேஷமா பண்றோம், உனக்கு இது தான் லாயக்குன்னு அவர் சொல்லலை. அவரே விஷ்ணு சஹஸ்ரநாம பாராயணம், ஒரு மணி நேர ராம நாம ஜபம், மூக பஞ்சசதி பாராயணம், ராமாயண பாகவத பாராயணம், இதத் தான் வெச்சுண்டு இருந்தார். ஒரு show காக தான் ஏதோ தனியா special ஆ பண்றா மாதிரி எதுவுமே வெச்சுக்கல. அவரோட life ஒரு openbook.

அவர் எனக்கு அம்பாள் உபாசனை வேண்டாம், ஸ்தோத்ர பாராயணம் போறும் என்று சொன்னார். அப்பறம் நான் ரொம்ப ஆசைப்படறேன்னு பார்த்துட்டு, “நீ வேணா பெரியவா கிட்ட பிரார்த்தனை பண்ணிண்டு, லலிதா சஹஸ்ரநாமம் ஸ்தோத்ரம் மட்டும் படி” என்று சொன்னார். நான் உடனே ஒரு லலிதா சஹஸ்ரநாமம் புஸ்தகத்தை வாங்கி என்னோட ஜோல்னா பைல போட்டுண்டேன். அன்னிக்கு சிவன் ஸார் கிட்ட போனேன். சிவன் ஸார் “அந்த பைல என்ன இருக்கு?” என்று கேட்டார். நான் ஒரு பேனா இருக்கு, notebook இருக்குன்னு சொன்னேன். அவர் "எல்லாத்தையும் கீழ கொட்டு” அப்டீனார். நான் எல்லாத்தையும் கொட்டினேன். அந்த லலிதா சஹஸ்ரநாம புஸ்தகத்தை

எடுத்து “இதத்தான் உனக்கு வேண்டாம்னு சொன்னேனே” என்றார். நான் shock ஆயிட்டேன். சரி மகான்கள் சொல்றத கேட்கணும்னு முடிவு செய்து கொண்டேன்.

இப்படி இவ்ளோ எல்லாம் அவா guide பண்ணலைன்னா. எனக்கு எல்லாம் தெரியும் என்கிற மாதிரி நான் ஒரு வழியில போயிருப்பேன். இங்கிலீஷ் படிப்பு, engineering படிச்சதுனால, ஒரு scientific temper. பல novels படிச்சு liberal views. பொறந்துதுல இருந்து நிறைய படிச்சு, ஆனந்தா கிட்ட எல்லாம் கீதா பிரவசனம் கேட்டு புத்தி குழம்பி போயிருந்தேன். ஆனா ஒரு கர்வமா இருந்தேன். அந்த கர்வத்தை எல்லாம் தட்டிவிட்டு, ஓரளவு நல்ல வழியில கொண்டு வந்தது, இந்த மகான்களுடைய சத்சங்கம் தான். இப்பவும் ஒண்ணும் திருந்தினதா தெரியல. அட்லீஸ்ட் ஒரு தெளிவு, வேற எதுவும் பண்றது இல்ல, மூக பஞ்சசதி, விஷ்ணு சஹஸ்ரநாம பாராயணம் பண்ணிண்டு இருக்கேன்.

சிவன் ஸாருக்கும், ஸ்வாமிகளுக்கும் ஒரு contradiction இருக்கற மாதிரி ஒரு எண்ணம் எனக்கு இருந்தது. ஸார் புஸ்தகத்தை படிச்சா அப்படி தோணும். “குதிரை ரேஸ்ல ஜெயிக்க, காதல் தோல்விக்கு, இதுக்கு எல்லாம் ஸ்தோத்ர புஸ்தகம் அச்சு அடிச்சு  விக்கறா. இதெல்லாம் நெட்ரூ போட்டா ஒண்ணும் நடக்காது. காரியஸித்திக்கும், ஸ்தோத்ர பாராயணத்துக்கும் ஒண்ணும் சம்பந்தம் கிடையாது. இந்த காலத்து சாமியார்கள், ராமானு ஒரு தடவை சொன்னா எல்லா பாபமும் போயிடும் என்று சொல்லி ஜனங்கள் இஷ்டப்படி இருக்க தூண்டி விடறா. அதெல்லாம் ரொம்ப தப்பு. பாபத்துக்கு பயந்து ரொம்ப நேர்மையா இருக்கணும்” னு சொல்றார். அது ரொம்ப வாஸ்தவம்.

ஆனா அத படிக்கும்போது ஒரு விதத்துல கலக்கமாக இருக்கும். ஸ்வாமிகள் விடாமல், "பகவன் நாமத்தோட மகிமை, ஸ்தோத்ர பாராயண மகிமை, ரிஷிகளோட வாக்கு, நம்பி பண்ணினால் நன்மை கிடைக்கும்" என்று சொல்வார். அதன் மூலமா அவர் பல பேருக்கு விதாயம் கொடுத்தார். பல பேருக்கு, கஷ்டம்னு வந்தா, அவாகிட்ட ஸ்வாமிகள் "இந்த ஸ்தோத்ரத்தைப் படி, கஷ்டம் போகும்" என்று சொல்லுவார். அவா அதை படிக்க ஆரம்பிக்கறதுக்குள்ளயே அவாளோட கஷ்டம் தீர்ந்துடும். தனக்கு இந்த கஷ்டம் இருந்துதாங்கற அளவுக்கு life நல்லபடியாக மாறி போயிடும். அதை நான் நிறைய பார்த்து இருக்கேன். ஸார் புஸ்தகத்துல இது மாதிரி இருக்கேன்னு நான் ஸ்வாமிகள்கிட்ட கேட்டதற்கு, அவர் “அது particular audience கு எழுதியிருக்கார். ரிஷிகள் வாக்கு சத்தியம். அத போட்டு நீ குழப்பிக்காத” என்று சொல்லிட்டார்.

அதை ஒத்துக் கொள்வதைப் போல சிவன் ஸாரும் என்கிட்டே personal ஆ "ஸ்வாமிகள் சொன்ன ஸ்தோத்ர பாராயணம் பண்ணறேன்"னு  சொன்னா

“நல்ல கார்யம். பண்ணு” என்று சொன்னார். நான் “ஸ்வாமிகள் சொல்லி ராம நாம ஜபம் பண்ணிண்டு இருக்கேன். அவர் அது தான் எல்லா தெய்வ வழிபாட்டுக்கும் மேலானது என்று சொல்றார்"னு சொன்ன போது, சிவன் ஸார் “வாஸ்தவம், அதுவும் ஒரு வழி. பொருட்பற்றை விலக்கி நாம ஜபம் பண்ணிண்டே இருந்தா அது தெய்வீகதுல கொண்டு போய் விடும்” னு சொன்னார்.

சிவன் ஸார் “நாம ஜபம் தெய்வீகத்துல கொண்டு போய் விடும்"னு சொல்றது கவனிக்க வேண்டிய விஷயம். அவரோட புஸ்தகத்தை படிக்கும் போது தான் தெய்வீகம் எவ்ளோ பெரிய உயர்ந்த நிலைன்னு புரியும். பகவன் நாமத்தை நம்பி அந்த நிலை வரைக்கும் போகலாம் அப்டீங்கிறது புரியும். ஸாரே ராம நாமத்தோட மகிமையை அவருடைய போதேந்தராள் சரித்தரத்துலயும் எழுதியிருக்கார். ஆனால் “நாம ஜபம் இருக்கு. நான் இஷ்டப்படி இருப்பேன்னு இருக்கக்கூடாது”

மஹான்களை நம்பியிருப்பது, நாம ஜபம் பண்ணுவது, அதைத்தான் இந்த கலியில பண்ண முடியும். அது மூலமா உயர்ந்த தெய்வீகத்தை அடையலாம், அப்டீங்கிற வாக்கு சிவன் ஸார் கொடுத்து இருக்கார். அவரே அதை சொன்னதுல இருந்து, எனக்கு, ஸ்வாமிகள் “நீ ராம ஜபம் பண்ணிண்டே போ, உனக்கு பற்றுகள் விலகும்”னு சொல்லி எழுதிக் கொடுத்துருக்கார். ஸார் “பற்றுக்களை விலக்கிட்டு நீ நாம ஜபம் பண்ணு” என்று சொல்றார். அந்த orderலதான் difference ஏ தவிர ரெண்டு பேரும் நாம ஜபத்தையும், ஸ்தோத்திர பாராயணத்தையும் மன அடக்கம், பணிவு, தெய்வபக்தி இதுல எல்லாம் உயரணும்கிற எண்ணத்தை, basis correct ஆ வெச்சுண்டு பண்ணு” என்று சொல்கிறார்கள் என்பது புரிஞ்சுது.

ஸ்வாமிகள் தன்கிட்ட வரவாளுக்கு ஆறுதல் சொல்லி “இதப்படிங்கோ. உங்களுக்கு இந்த கஷ்டம் சரியாப் போயிடும். அல்லது இந்த நல்லது நடக்கும்” என்று சொல்றதை எங்கிட்டே சில பேர் கேலியா பேசினா. அது எனக்குக் கஷ்டமா இருந்தது. நான் ஸ்வாமிகள் கிட்ட “என்னத்துக்கு இந்த மாதிரி வரம் கொடுக்கறேள். சில பேர் கேலி பேசறா. ஸார் சொல்ற மாதிரி வினைகளை எல்லாம் அனுபவிச்சு தானே தீர்க்க வேண்டியிருக்கு” என்று சொன்னேன். ஸ்வாமிகள் “நான் ஏன் சொல்றேன்னு தெரியல. பணம் சம்பாதிக்கிற நோக்கத்துல நான் சொல்லலைங்கிறது நீ ஒத்துண்டா சரி” என்று சொன்னார். கொஞ்சம் hurt ஆயிட்டார். நான் அந்த மாதிரி பேசியிருக்கக்கூடாது. நமஸ்காரம் பண்ணி "மன்னிச்சுடுங்கோ" என்று சொன்னேன். அன்னிக்கு சிவன் ஸார்கிட்ட போனோம். சிவன் ஸார் ஸ்வாமிகளை காண்பிச்சு “இவா சொல்றது

எல்லாம் ஈஸ்வர வாக்கு” என்று சொன்னார். அதுல இருந்து நான் விதண்டாவாதம் பண்ணக்கூடாதுன்னு புரிஞ்சுண்டேன்.

மஹாபெரியவா ஸித்தி ஆன போது நான் சிவன் ஸாரிடம் இருந்தேன். காஞ்சீபுரம் போகட்டுமா என்று கேட்டேன். “நீ இங்கேயே இரு.” என்று சொன்னார். “நீ கஷ்டம் தாங்க மாட்ட. அதனால் அப்படி சொல்லி இருக்கா.” என்று ஸ்வாமிகள் சொன்னார்.

ஸார் கிட்ட உத்தரவு வாங்கிண்டு அமெரிக்கா போனேன். அங்கே இருந்த போது என் காலை சரி பண்ணிக் கொள்ள வேண்டும் என்ற ஒரு எண்ணம் வந்தது. அப்போது என் அம்மா அப்பாவை, சிவன் ஸாரை தரிசனம் பண்ணிட்டு வரும்படி கேட்டுக் கொண்டேன். அவர்கள் போயிருந்த போது ஸார் “கொஞ்சம் காலை விந்தி நடப்பானே, அந்த கணபதி தானே” என்று சொன்னார். அதைக் கேட்டவுடன் "இது நமக்கு அடையாளம்" என்று காலை அப்படியே விட்டு விட்டேன். இப்படி, எங்கிருந்தாலும் மஹான்கள் கருணை நம்மைக் காக்கிறது.

காமாக்ஷி வடிவமான மஹாபெரியவாளும், பரமேஸ்வர ஸ்வரூபமான சிவன் ஸாரும், மகாவிஷ்ணு வடிவமான கோவிந்த தாமோதர ஸ்வாமிகளும் இருக்கும் போது நமக்கு ஒரு குறையும் இல்லை.

மகான்கள் வழி காண்பிச்சிருக்கா. அந்த வழியில போகணும். எவ்வளவோ பெரியவா அநுக்ரஹம் இருந்தாலும் நான் ரொம்ப மெதுவாகத்தான் போயிண்டு இருக்கேன். உங்கள் ஆசீர்வாதம் வேணும்.

ஜானகி காந்த ஸ்மரணம் ஜய ஜய ராம ராம.